செ.வெ.எண்.34 நாள்: 22.04.2020

# அரியலூர் மாவட்டம்
# செந்துறை பகுதியில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று ஆய்வு.

அரியலூர் மாவட்டம், செந்துறை வட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்புக்குள்ளாகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் தடுப்பு நடவடிக்கை பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

**இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

அரியலூா மாவட்டம், செந்துறை, இராயபுரம் பகுதியில் 02 பெண்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டு, அவர்கள் திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றனர். எனவே, இப்பெண்கள் வசித்த பகுதிகளை தனிமைப்படுத்தப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு, தீவிர கண்காணிப்பில் உள்ளது. நவீன இயந்திரங்களை கொண்டு இப்பகுதிகளை கிருமி நாசினி மூலம் சுத்தப்படுத்தும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மேலும், இப்பகுதியில் வசிப்பவர்களுக்கு இரத்த மாதிரிகளும் எடுக்கப்பட்டு பரிசோதனை செய்யப்படவுள்ளன. கண்காணிப்பில் உள்ள இப்பகுதி மக்கள் வீட்டை விட்டு வெளியே வராத வண்ணம் அவர்கள் வீடுகளுக்கே பாதுகாப்புடன் சென்று அத்தியாவசிய பொருட்கள் வழங்க ஊரக வளர்ச்சித்துறைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பகுதியிலுள்ள அனைத்து தரப்பு மக்களும் வெளியில் வராமல் கொரோனா வைரஸ் தடுப்பு நடவக்கைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை பணிகள் அனைத்து பகுதிகளிலும் தீவரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தடை செய்யப்பட்ட பகுதிகளில் காவல் துறையின் மூலம் பொதுமக்கள் வெளியே வராத வண்ணம் சமூக இடைவெளியினை கடைபிடிக்கப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், மருத்துவக்குழுவினர் 24 மணிநேரமும் இத்தகைய பகுதிகளை தீவரமாக கண்காணித்து வருகின்றனர். தேவையில்லாமல் 144 தடை உத்தரவை மதிக்காமல் வெளியில் வருபவர்கள் மீது காவல் துறையின் மூலம் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பொதுமக்கள் மாவட்ட நிர்வாகம் எடுக்கும் நோய் தடுப்பு நடவடிக்கை பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட காவல் காணிப்பாளர் வீ.ஆர்.சீனிவாசன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) சு.சுந்தர்ராஜன், கோட்டாட்சியர் ஜெ.பாலாஜி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிசாமி, வட்டாட்சியர்கள் முத்துகிருஷ்ணன், சந்திரசேகரன், வட்டார மருத்துவ அலுவலர் அனிதா, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜா, தேவி, சிவாஜி மற்றும் சுகாதார அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**